1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி வேளாண்மைத் துறையோடு கலந்து பேசி முடிவு எடுத்து இலவசமாகக் கொடுப்பது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 519, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

519—

மலைவாழ் மக்களுக்காக கரியகோவில் — ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை.

*9454—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலை வாழ் மக்கள் நலன் கருதி கரியகோயிலிருந்து ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது சாலைப் பணி முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பழங் குடி மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் கரிய கோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணி 7-9-1990ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் இதுவரையில் மூன்று அடுக்கு ஜல்லி நிரவல் செய்யும் பணி முடிவு அடைந்துள்ளது. மே மாதத்திற்குள்ளாக தார்ச்சாலை போடப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியகோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையானது தற்போது பராமரிக்கப்பட்டு தார்ச்சாலையாகப் போடப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை இதய தெய்வம் அவர்களுக்கும், நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து மிக விரைவாக இந்தப் பாதை செப்பனிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக, வருகின்ற மே மாதத்திற்குள்ளாகவே தார்ச்சாலை போடப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 520, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

511—

திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை.

*11195—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

520—

பூம்புகார் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள்.

15347—திரு. எம். பூராசாமி:—

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?